செய்தி வெளியீடு எண்:240 நாள்: 07.06.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த் தொற்றுப் பரவலை குறைக்கின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் போர்க்கால அடிப்படையில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பயனாக, தற்பொழுது நோய் தொற்று வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளுக்கு உதவுகின்ற வகையில், இயன்ற அளவிலான நிதி உதவியினை "முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"–க்கு வழங்கிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் அரசு சார்ந்த தன்னாட்சி நிறுவனங்களில் பணியாற்றி வருகின்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சார்ந்துள்ள துறைகளின் சார்பில், ஒரு நாள் ஊதியமானது வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், தமிழ்நாடு அரசு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள், சாலைப் போக்குவரத்து நிறுவனம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு உள்ளிட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்ற, ஏறத்தாழ 1.20 இலட்சம் பணியாளர்களின் ஒரு நாள் ஊதியமாக, 14 கோடியே 46 இலட்சத்து 70 ஆயிரத்து 635 ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (07.06.2021) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின் போது, போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., மற்றும் போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9